## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கால்நடை பராமரிப்புத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.ஜெ. கிருத்திகா தேவி, த/பெ. (லேட்) மரு.இரா.ஜெயராம் – இளநிலை உதவியாளராக பணி நியமனம் – விதித்தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது புரட்டாசி மாதம் 10–ம் நாள்

அரசாணை (டி) எண்.468 நாள் 27.09.2022

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 21156/ஆர்.3/2018, நாள் 30.09.2021.

------

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதத்தில், விருதுநகர் மண்டலம், ம.ரெட்டியப்பட்டி கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவராக பணியிலிருக்கும்போது 03.03.2005 அன்று மறைந்த மரு.இரா.ஜெயராம் என்பவரது மகள் திருமதி. ஜெ. கிருத்திகா தேவி என்பவருக்கு கருணை அடிப்படையில் காஞ்சிபுரம் மண்டலம், சிட்லபாக்கம், கால்நடை மருத்துவமனை, கால்நடை மருத்துவர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, 29.01.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள்/ சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படைக்கான பணி நியமனத்திற்குரிய ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ள போதிலும், தனியருக்கு திருமணமாகாத நிலையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரியிருந்து, அவருக்கு பணி நியமனத்திற்கு முன்பு திருமணமானதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15க்கு முரணானது என்பதாலும், மேலும் தனியருக்கு பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2) ஆகிய விதிகளைத் தளர்வு செய்து, தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 29.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. ஜெ. கிருத்திகா தேவி என்பவருக்கு பணி நியமனத்திற்கு முன்பு திருமணமானதால், அவரது பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 29.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15 மற்றும் பணப்பலன்கள் நியமன

நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2) ஆகியவற்றை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ல், பிரிவு 58-ன் கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி தளர்வு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

3. கால்நடை பராமரிப்புத் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ஜெ. கிருத்திகா தேவி, த/பெ. (லேட்) மரு.இரா.ஜெயராம் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 29.01.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால் இதனை நியமன அலுவலருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பணிக்கப்படுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.15726/க்யூ-1/2022-1, நாள் 15.9.2022ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்

அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.

திருமதி ஜெ. கிருத்திகா தேவி, இளநிலை உதவியாளர், (ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35 (வழியாக)

மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)

சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர் .

<u>நகல்</u>

தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் - மீனவர்நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலன்- திறன் மேம்பாட்டுத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

அரசு முதன்மைச் செயலளாரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28.9.22

பிரிவு அலுவலர்

28.9.22

CS CamScanner